மற்றொரு கோணம்!

# நீங்கள் யார்?

**வேலை பார்க்கும் இடத்தில் எனக்கு நிறைய பிரச்சினைகள். என் மீதுதான் தவறு என்று சிலரும், என்னைச் சுற்றியிருப்பவர்கள் மேல் தவறு என்று சிலரும் சொல்கிறார்கள். நான் என்ன செய்ய வேண்டும்?**

**-ரிஷிகுமார், பெங்களூரு.**

உங்களில் பலபேர், வேலை பார்க்கிற இடத்தில்தான் கூடுதல் நேரம் செலவழிக்கிறீர்கள். எனவே, குடும்ப உறுப்பினர்களுடன் இருக்கிற உறவு போலவே வேலைபார்க்கிற இடத்தில் உள்ளவர்களுடனான உறவு மிகவும் முக்கியம். வாழ்க்கையின் முக்கியமான அங்கம் தான், உங்கள் வேலை. உங்களுக்கு முக்கியமானவர், முக்கியமில்லாதவர் என்று நீங்கள் தரம் பிரிக்கிற போதுதான் அந்த மனிதரால் உங்களுக்கு பிரச்சினை ஏற்படுகிறது.

புரிந்து கொள்வதன் அடிப்படையில் உறவுகள் உருவாக வேண்டுமே தவிர, ஒருவரையொருவர் சாமர்த்தியமாகப் பயன்படுத்திக்கொள்வது எப்படி என்று பார்க்கக்கூடாது. அதன்மூலம் மற்றவர்கள்மேல் நீங்கள் ஆதிக்கம் செலுத்த முற்படுவீர்கள். இதை யாருமே விரும்பமாட்டார்கள்.

சிக்கல்களுக்கு யார் காரணம் என்பதைவிட உங்கள் தன்மை எப்படி இருக்கிறது என்று பாருங்கள். உங்கள் உடல், மனம், உணர்ச்சி, சக்தி நிலை ஆகியவை மகிழ்வான தன்மையில் இருக்கும்போது உறவு முறைகளில் பிரச்சினை இருக்காது.

நான் ஏதாவதொரு டாக்ஸியில் ஏறினால், வண்டி கிளம்பி சிறிது நேரத்திலேயே அதன் ஓட்டுநர் தன் மொத்த வாழ்க்கையையும் என்னோடு பகிர்ந்துகொள்ளும் அளவு உரையாடலில் நெருங்கிவிடுவார். காரணம், நான் ஓரிடத்தைச் சென்றடைவதற்கு அவரை ஒரு கருவியாகக் கருதாமல், எனக்குத் தருகிற அதே இடத்தை அவருக்கும் தருகிறேன்.

நீங்கள் மிகவும் நேசிக்கிற மனிதருடன் மொத்த நேரத்தையும் செலவிட்டால் மகிழ்ச்சியாக உணர்வீர்கள். அது நடைமுறையில் சாத்தியமில்லை. எனவே நீங்கள் தொடர்பு கொள்கிற ஒவ்வொரு மனிதரையும் முழுமையாக நேசியுங்கள் உங்கள் வாழ்க்கை மகத்தான மாற்றத்திற்கு ஆளாவதை உணர்வீர்கள்.

**இந்த வாழ்க்கைக்கு ஆன்மீகம் அவசியமா?**

**-தண்டபாணி, மதுரை-10**



உங்களிடமுள்ள இருதயம், நுரையீரல், கிட்னி ஆகியவற்றால் நீங்கள் நீங்களாக இல்லை. உங்கள் உடம்பினால் மட்டும் நீங்கள் நீங்களாக இருக்க முடியாது. உங்கள் எலும்புகள் மற்றும் சதைக்குவியல்களினால் நீங்கள் நீங்களாக இல்லை. உங்கள் உயிர்தான் உங்களை நீங்களாக உருவாக்கி இருக்கிறது. எனவே எதை வைத்து ஒருவர் ஆன்மீகவாதியா இல்லையா என்று கூற முடியும்?

எல்லாருமே ஆன்மீகத்தில்தான் இருக்கிறார்கள். ஏனென்றால் எல்லாருக்குமே உயிர் இருக்கிறது. இப்போதைய கேள்வி இதுதான். சிலர் தங்களுடைய உடம்பை நன்றாக கவனித்துக் கொள்கிறார்கள். உடல்நிலையில் ஆரோக்கியமாக இருப்பவர்கள் பொருளியல் சார்ந்த உலகியல் வாழ்வில் சிறந்து விளங்குவார்கள். ஒரு மனிதன் ஆரோக்கியமாக இருந்தால், பேருந்தில் ஏற வேண்டுமென்றால் ஓடிச்சென்று ஏறிவிடுவான்.

மனநிலை சிறப்பாகயிருந்தால், மனம் சம்பந்தமான காரியங்களைக் கடந்து செல்வீர்கள். உங்களுக்கு நிலையற்ற மனமிருந்தால், மனதளவில் துன்புறுவீர்கள். உங்கள் உணர்வுகள் வலிமையாக, சமநிலையிலிருந்தால், வாழ்வின் உணர்வுநிலைகளை அற்புதமாக உணர்வீர்கள். அதாவது நீங்கள் முழுமையான சமநிலையில் இருந்துகொண்டே ஒவ்வொரு உணர்வுகளிலும் உங்களை முழுமையாக ஈடுபடுத்தி, எல்லாவற்றையும் அனுபவித்து உணர முடியும்.

அதேபோல் உங்கள் சக்தி முறையாக இருந்தால் நீங்கள் வாழ்வில் வேறொரு பரிமாணத்திற்குச் செல்ல முடியும். இவையெல்லாம் இல்லாவிட்டால், நீங்கள் எதுவுமில்லாதவர்கள் போல்தான்.

ஆன்மீகவாதிக்கும், லௌகீகவாதிக்கும் இடையே உள்ள வேறுபாடு என்னவென்று மனிதர்கள் தொடர்ந்து கேட்கின்றனர். உண்மையில் அப்படி ஒருவகையான மனிதர்கள் கிடையாது.

உடல், மனம், சக்தி ஆகிய அனைத்தும் ஒன்றுதான். யாராலும் இதைப் பிரிக்க முடியாது. துப்பாக்கியால் சுட்டால்தான் இதைப் பிரிக்கமுடியும். அல்லது ஒருவர் விழிப்புணர்வில் வளர்ந்தால் இதனைப் பிரிக்கலாம். அது வேறு விஷயம். எந்த ஒருவராலும் 100% லௌகிகத்திலோ அல்லது ஆன்மீகத்திலோ இருக்க முடியாது.

சாகும் தருவாயில் உங்கள் வாழ்வை சிறிது திரும்பிப்பார்த்தால், நீங்கள் செய்தவைகள் எல்லாம், குழப்பமான நிலையில் பிழைப்பிற்காகச் செய்ததாக உள்ளது. அதிலும் அப்படிச் செய்தவை எல்லாம் உயிரோடிருப்பதற்குத் தேவையானவை மட்டுமே. வெறுமனே உயிரோடு இருப்பதற்கான முயற்சியில் மனிதனுக்கு நேர்ந்துள்ள அவலம் அளவற்றது. பெரும்பாலான மக்கள், வயது ஏற ஏற மனதளவில் அதிகம் காயப்படுகின்றனர். பெரும் வேதனை கொள்கின்றனர். வயதாக வயதாக அவர்களுக்கு ஞானம் அதிகரிக்கவில்லை. அதற்கு மாறாக அவர்களின் மனக்காயம்தான் அதிகரிக்கிறது.

'நீங்கள் யார்' என்பதை நிர்ணயிப்பதாக இருந்தால் உங்கள் வாழ்க்கை பயனற்ற ஒன்றாகிவிடும். 'நீங்கள் யார்?' என்பது ஆனந்தத்தில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தால், இவைகள் எல்லாவற்றையும் நீங்கள் வைத்துக் கொள்ளலாம். ●

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**